**செ.வெ.எண்: 31** **நாள்: 19.12.2016**

**பத்திரிகைச்செய்தி**

புதுக்கோட்டை மாவட்டம், **அறந்தாங்கி** வட்டம், **கலக்கமங்கலம்** கிராமத்தில், **22.12.2016** அன்று காலை 10.00 மணியளவில், புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களது தலைமையிலான மக்கள் தொடர்பு முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு, அரசுத் துறைகளினால் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பெற்றிடுமாறும், தங்கள் குறைகள் குறித்து, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு மனு செய்து, பயனடையுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**